(முற்பகல் 10.00)

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சந்த் மீதான வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்ற கோரிக்கை.

* திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கிற போது சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே கலந்து பங்கேற்க முடியாத அந்த வகையில் துர்ப்பாக்கியவசமாக மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் கைது செய்யப்பட்டு, கடலூர் ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கிறார். ஆக இரண்டு தரப்பு விவாதங்களும்,—போலீஸ் தரப்பின் சார்பிலே சொன்ன விவாதங்களை முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதிர்கட்சியின் சார்பிலே சட்டமன்ற உறுப்பினர் பற்றிய நிகழ்ச்சி களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.—இந்த நிகழ்ச்சிகள் எப்படி இருந்தாலும், சட்டமன்ற நிகழ்ச்சிகளிலே சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இந்தக் கூட்டத் தொடரிலே 15 நாட்கள் அவர் ஜெயிலில் இருந்தால், அவர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாது. இது பிரைவேட் கேஸ் அல்ல. தனி வழக்கு அல்ல. அரசியல் ரீதியாக அத்தோடு சம்பந்தப்பட்ட வழக்கு என்கின்ற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் மீது இருக்கின்ற வழக்கை வாபஸ் பெற அரசியல் ரீதியாக அதில் நடவடிக்கை எடுத்து, சட்டமன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின்ற வாய்ப்பை ஏற் படுத்தித் தருவார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியிலுள்ள திரு. உகம்சந்த் அவர்கள் மாத்திரமல்ல, எல்லா உறுப்பினர்களும் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ள வேண்டுமென்பது தான் இந்த அரசினுடைய விருப்பம். திரு. உகம்சந்த் அவர்கள்மீது போடப்பட்டுள்ள வழக்கின் தன்மை களை ஆராய்ந்து அவரும் இந்த அவை நிகழ்ச்சிகளில் இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்கின்ற அளவிற்கு ஆவன செய்ய அரசு முயற்சி எடுக்கும்.

(ஆ) கைத்தறி மற்றும் பட்டு கூட்டுறவுச் சங்கங்களை அரசு கலைத் திருப்பது குறித்து.

*திரு. சா பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தென் மாவட்டங்களில் ஒரு பழமொழி உண்டு. 'மகன் இறந்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலி அறுத்தால், அதாவது விதவையானால் சரி' என்று சொல்வார்கள். (குறுக்கீடு)